இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 106 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 09 – சனிக்கிழமை 25 நவம்பர் 2023 – வெளியீு 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 106: Thiruvalluvar Year - 2054 - Karthigai 09 - Saturday 25 November 2023 - Dak 16 Pages ₹ 5.00

## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (4)

# மறையாத வடுக்களும்; மரத்தின் நிலையான வளர்ச்சியும்!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

எழுச்சி முரசமும், எமக்கினிய தோழரும் திராவிடர் இயக்கத்தின் "திருஞான சம்பந்தர்" என்று அறிஞர் அண்ணா அவர்களால் அழைக்கப்பட்டவரும், பெரியார் அவர்களின் பேரன்புக்குப் பாத்திரமானவருமான தமிழர் தலைவர் எனப் போற்றப்படும் வீரமணி அவர்கள், நமது பொதுச் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் ஆர்க்காட்டார், தம்பி துரைமுருகன், தம்பி வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோர் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த என் வீட்டுக் கூடத்தில் ஒன்று சொன்னார்.

"இளைஞர்களுக்கு வழி விடுவோம்" என்று முரசொலியில் வருகிற கடிதங்கள் மிகச் சிறப்பாக இருக்கின்றன. ஒருமுறை சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு உவமை சொன்னீர்கள்! அந்த உவமையை எப்படியாவது மீண்டும் இந்தக் கடிதக் கட்டுரையில் நினைவுபடுத்துங்கள், அற்புதமான உவமை அது! கட்டுரைக்கும் பொருத்தமாகவும் இருக்கும்!" என்று புகழ்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தார்.

1981ஆம் ஆண்டு நான் எழுதி வெளிவந்த "பேசும் கலை வளர்ப்போம்" என்ற நூல் வரிசையாக எட்டுப் பதிப்புகள், "பாரதி பதிப்பக"த்தின் வாயிலாக வெளிவந்தன. அவற்றில் முதல் பதிப்பிலேயே நான் "பேசும் கலை" வளர்த்தவர்களின் பட்டியலிலே வீரமணியார் அவர்களையும் இணைத்து எழுதியிருந்தேன். அதில் ஒரு பகுதி வருமாறு : -

**"இப்போது வயது நாற்பத்தி ஆறு. தோற்றம் வயதைத் தெரிவிக்காது என்றாலும், நன்கு முதிர்ச்சி பெற்ற கருத்துகளை மேடைகளில் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார். சற்றுக் குனிந்து வளைந்து, ஆனால், யாருக்கும் வளையாத கொள்கை களை அள்ளித் தருகிறார். கறுப்புச் சட்டை மேனியை அலங்கரிக்கிறது. கையிலே சொற்பொழிவுக்கான குறிப்புகள். அருகேயுள்ள மேஜையிலே அன்றைய பேச்சுக்கான ஆதாரங்களை எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பான பெரிய பெரிய புத்தகங்கள். "இங்கேதான் நீங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அதுதான் முக்கியமானது, மிக மிக முக்கியமானது" என்ற சொற்றொடர் அடிக்கடி பேச்சிடையே வந்து கொண்டிருக்கிறது. மணிக்கணக்கில் பேசுகிறார். யார் இவர்? வேறு யாருமல்ல! தனது பத்தாவது வயதிலேயே திராவிடர் இயக்க மேடைகளில் பேச ஆரம்பித்தவர் - இன்றைய திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் - விடுதலை நாளிதழின் ஆசிரியர் - வீரமணி அவர்களைத்தான் குறிப்பிடுகிறேன்.**

**பத்து வயது முதற்கொண்டே பெரியாருடன் பணி புரிந்து கொண்டு - பள்ளியிலும் பயின்று - கல்லூரியிலும் பட்டம் பெற்று - திராவிடர் கழகத்தின் ஓய்வறியாத் தொண்டராகவும் விளங்கிய வீரமணி, இளந்தளிர்ப் பருவத்திலே மேடையிலே பேசுகிற வியப்புமிகு நிகழ்ச்சியைக் காணப் பெருங் கூட்டம் திரளும்."**

இன்னும் சில நாட்களில் 75 வயது நிறைவடைய இருக்கும் அந்தப் பெரியாரின் பெருந் தொண்டரை என் இனிய இளவல் தமிழர் தளபதி வீரமணியை விழா மேடையில் வாழ்த்த இருக்கிறோம் - எப்படி? அந்த இளைஞருக்குப் பெரியாரின் தலைமையில் உள்ள பேரியக்கம் வழி விட்டு, வாழ்த்திப் போற்றியதால்தானே, இன்று திராவிடர் இயக்கத்தை சமுதாயப் புரட்சி இயக்கமாகத் தூக்கி நிறுத்திடத் துணை நிற்க முடிந்தது!

**கலைஞர் கடிதம்**

உடன்பிறப்பே, என்னை விட்டு விட்டு, சற்று சுற்றுமுற்றும் கொஞ்சம் அண்ணாந்து பார்த்தால் இப்போது பேராசிரியர் மட்டும்தானே, பொதுச் செயலாளர் எனும் புகழ் மகுடம் – பொறுப்பு மகுடம் தாங்கி புன்னகை சிந்திக் காணப்படுகிறார் – அவர் எப்படிக் கிடைத்தார் இந்த இயக்கத்தின் பொதுச் செயலாளராக?

திருவாரூரில் திராவிடர் இயக்கத் தொண்டனாக நான் அறிமுகமாகியிருந்தபோது, திருவாரூர் விஜயபுரம் சிக்கந்தர் விழாவுக்கு வந்த அண்ணா அவர்கள், "நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மாணவர் ஒருவரை அழைத்து வந்துள்ளேன். அவர் முதலில் பேசுவார்" என்றார். இளைத்த உருவத்தினராய், இனிய குரலெடுத்து அன்பழகனார் அப்போது ஆற்றிய உரை, "இந்த இளைஞர்களுக்கெல்லாம் இந்த இயக்கம் வழி விட வேண்டியதுதான்!" என்பதை நிலைநாட்டிடும் வண்ணம் அமைந்தது. அண்ணா கண்டெடுத்த அற்புத வைரமணி அன்பழகன் என்ற உண்மையும் – அனைவரையும் ஆரத் தழுவியது!

அந்த வரிசையில் மற்றும் எத்தனை எத்தனை இளைஞர்கள் – நெடுஞ்செழியன், மதியழகன், முரசொலி மாறன்–ஈ.வெ.கி. சம்பத்,கண்ணதாசன் –ஆசைத் தம்பி – எஸ்.எஸ். தென்னரசு – எம்.எஸ். கே. சத்தியேந்திரன்– தங்கபாண்டியன் – தா.கிருட்டிணன் – கம்பம் ராஜாங்கம் – கம்பம் நடராசன்– பொன்.முத்துராமலிங்கம்–அக்னிராஜ்–மேலூர் மலைச்சாமி – ரகுமான்கான் – ஜின்னா – என். வி.என். சோமு–சாதிக்பாட்சா – திருமதி சற்குணம் –ரெத்தினவேல் பாண்டியன்– அழகிய நம்பி– ஏ.எல். சுப்பிரமணியம் –எம்.சி. பாலன்– செ. மாதவன் –இளம்பரிதி – ஏ.பி. சனார்த்தனம் –தவமணி ராசன் கருணானந்தம்– இளம்வழுதி –நாஞ்சில் மனோகரன் –சி.டி. தண்டபாணி –சத்தியவாணி முத்து – அரங்கண்ணல் – வில்லாளன்– பொற்செல்வி – வெங்கடாசலம் – கே.ஏ. கிட்டு – டி.கே. சீனிவாசன்– எஸ். டி. சோமசுந்தரம்– எல். கணேசன்– வைகோ – துரைமுருகன் – முரசொலி செல்வம்– அறிவழகன் – ஆலடி அருணா – மைனர் மோசஸ் – பெ. சீனிவாசன்– காளிமுத்து –காமராசன் –செஞ்சி ராமச்சந்திரன்–கண்ணப்பன்–உ. பில்லப்பன்–உ. திருஞானம் –ஜீவா கலைமணி–நாவளவன்–ராஜா –முகமது– வேங்கடபதி – உடையப்பன்– தஞ்சை சுல்தான் –முல்லை சத்தி– வி.மாயவன்– நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி–பண்ருட்டி ராமச்சந்திரன்–ஜெ.எஸ். ராஜு–செ.கந்தப்பன் –க.பொன்முடி– புதுக்கோட்டை ராமனாதன் – எம். கமலநாதன்– கவிஞர் வேழ வேந்தன் – சபாபதி மோகன்.

இப்படி வீறுநடை போட்டு வந்த இளைஞர் பட்டாளம்! அதில் ஒரு சிலர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும் – ஒரு சிலர் அறிஞர் அண்ணாவுக்கே பகைவராக மாறியும்– வேறு முகாம் சென்றனர் – அல்லது விலக்கப்பட்டனர். ஒருசிலர் மறைவெய்தியும் விட்டனர். பெரியாரிடமிருந்து பிரிந்திட நேர்ந்த போது, அண்ணா அவர்கள், பெரியாரிடம் வைத்திருந்த மதிப்பு மரியாதையை என்றைக்கும் குறைத்து ஒரு வார்த்தை கூறியதில்லை. ஆனால் அண்ணா தலைமையைப் பிரிந்த இவர்களில் சிலர் அண்ணாவை ஏசிப் பேசிட என்றுமே தயங்கியதில்லை. அத்துணை நன்றியையும், அரசியல் நாகரிகத்தையும் தம்மை வளர்த்த இயக்கத்திடமும் தலைமையிடமும் காட்டி நடந்து கொண்டனர் என்பதை நாடறியும்.

இப்படி, இளைஞர்கள் குவிந்த வேளையில் தான் கொள்கைப் பற்றும், லட்சிய வெறியும்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## ரூ.5,500 கோடி சொத்துகளை மீட்டதற்காகப் பாராட்டாமல் – 'பக்தி' என்ற பெயரில் 'பகல் வேஷம்' போடும் பா.ஜ.க.

# ஒன்றிய அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

## திருமங்கலம் கோபால் இல்ல மணவிழாவில் உரை!

**சென்னை, நவ. 24 -**

**கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, காமராசர் அரங்கத்தில் நடைபெற்ற திருமங்கலம் கோபால் இல்ல மணவிழாவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்திய பின், 5.500 கோடி ரூபாய் சொத்துகளை மீட்டதற்காக கழக அரசைப் பாராட்டாமல் 'பக்தி' என்ற பெயரில் 'பகல் வேஷம்' போடும் பா.ஜ.க. ஒன்றிய அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்து உரையாற்றினார்.**

கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2023) திருமங்கலம் கோபால் அவர்களின் இல்லத் திருமண விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

திருமங்கலம் கோபால் – சரோஜினி தம்பதியருடைய அருமை மகன் கோ.ராஜ்குமார் அவர்களுக்கும், சாகுல் அமீது – வகிலாபானு இணையருடைய அருமை மகள் சா.சஜீ அவர்களுக்கும் நம்முடைய அன்பான வாழ்த்துகளோடு இந்த மணவிழா நிகழ்ச்சி நிறைவேறியிருக்கிறது.

இந்த மணவிழா நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், நான் தொடர்ந்து ஒவ்வொரு திருமண விழாக்களிலும் எடுத்துச் சொல்லக்கூடிய செய்தி அதுவும் சீர்திருத்த முறையில், சுயமரியாதை உணர்வோடு நடைபெறக்கூடிய திருமணமாக இருந்தால், அந்தத் திருமணத்தில் நிச்சயமாக நான் எடுத்துச் சொல்வதுண்டு. இதுபோன்ற சீர்திருத்தத் திருமணங்கள், சுயமரியாதை உணர்வோடு நடைபெறக்கூடிய திருமணங்கள், 1967க்கு முன்பு நடைபெறும் என்று சொன்னால், அந்தத் திருமணங்கள் சட்டப்படி, முறைப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தோடு நடைபெறமுடியாத ஒரு சூழ்நிலை. ஆனால், 1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்த பிறகு, கழகம் முதன்முதலில் அரசு பொறுப்பேற்ற பிறகு, முதன்முதலில் சட்டமன்றத்தில் முதலமைச்சராக நுழைந்த அண்ணா அவர்கள் சீர்திருத்த திருமணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடியாகும் என்கிற அங்கீகாரத்தை நமக்கெல்லாம் பெற்றுத் தந்தார்கள்.

ஆகவே, இன்றைக்கு நடைபெற்றிருக்கக் கூடிய இந்தச் சீர்திருத்தத் திருமணம் சட்டப்படி, முறைப்படி செல்லுபடியாகும் என்கிற அங்கீகாரத்தோடு நடந்தேறியிருக்கிறது. இது சீர்திருத்தத் திருமணம் மட்டுமல்ல, சுயமரியாதை உணர்வோடு நடைபெறக்கூடிய திருமணம் மட்டுமல்ல, இது ஒரு கலப்புத் திருமணம். அது மட்டுமல்ல, இது காதல் திருமணமாகத்தான் இருக்கும் என்று நிச்சயமாக நான் நம்புகிறேன். அந்த வகையில்,



நடைபெற்றிருக்கக்கூடிய இந்த மணவிழா நிகழ்ச்சியில், நானும், நம்முடைய கழகத்தின் பொதுச் செயலாளராக இருக்கக்கூடிய அண்ணன் துரைமுருகன் அவர்களும், பொருளாளர் பாலு அவர்களும், அதேபோல கழக முன்னோடிகள் எல்லாம் பங்கேற்று வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

### கலைஞரின் நிழல் போன்று தொடர்ந்த கோபால்!

தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பாதுகாவலராக அவருடன் சென்று எந்த நிகழ்ச்சிக்குச் சென்றாலும், கழக நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, பொது நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, தலைவரை நிழல்போல் தொடரக்கூடிய ஒரு பாதுகாவலராக விளங்கியவர் நம்முடைய அன்பிற்குரிய சகோதரர் திருமங்கலம் கோபால் அவர்கள். அதுபோல், எப்படி பாதுகாவலராக கோபால் இருந்தாரோ, தலைவர் உடல் நலத்தைப் பாதுகாப்பதற்கு டாக்டராக கோபால் தான் இருந்தார். இரண்டு கோபால்தான் தலைவரோடு நெருங்கி அருகில் தலைவரைப் பாதுகாத்து வந்தார்கள் என்று எல்லோருக்கும் நன்றாக தெரியும்.

தலைவர் கலைஞருடைய கண் அசைவில் அவர் எதைச் சொல்லுகிறார், எதைச் சொல்லப் போகிறார், என்ன உத்தரவிடுகிறார், எதை நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார் என்று தலைவர் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதல்ல, அவருடைய கண் அசைவிலேயே தெரிந்து கொண்டு அதை நிறைவேற்றும் ஆற்றலைப் பெற்றவர் நம்முடைய திருமங்கலம் கோபால் அவர்கள்.

நான் மயிலைப் பகுதியில் கபாலீசுவரர் கற்பகம்பாள் திருமண மண்டபத்தில், இரண்டு திருமண நிகழ்ச்சிகளை முடித்து விட்டு இந்த நிகழ்ச்சிக்கு வந்து கொண்டிருந்தபோது, நம்முடைய முதன்மைச் செயலாளர் நேரு அவர்கள் என்னுடன் வந்தார்கள். அவரிடத்தில், கோபாலை பற்றிக் காரில் சொல்லிக் கொண்டிருந்தேன். நான் சொன்னதை அப்படியே இங்கே பேசிவிட்டார். நேரு எப்போதும் ஸ்பீடு, எல்லோரும் சொல்வதைவிட அவர் சொல்லிவிட வேண்டும். பிறகு தான் தெரிந்து கொண்டேன். ஏன் இவரிடம் சொன்னேன் என்று நான் உணர்ந்தேன். அந்த அளவிற்கு ஆர்வத்தோடு அவரும் அதை எடுத்துச் சொன்னார்.

### 'திண்டுக்கல் தீர்ப்பு' நாடகம்!

முதன்முதலாக, தலைவருக்கு அறிமுகம் ஆவதற்கு முன்பே எனக்கு கோபால் அவர்கள் அறிமுகம் ஆனார். 1980–ஆம் ஆண்டு ஜூலையில் மதுரையில், இளைஞரணி துவக்கப்பட்ட நேரத்தில், அப்போது என்னுடன் இருந்து எனக்குத் துணை நின்றவர் நம்முடைய திருமங்கலம் கோபால் அவர்கள். எம்.ஜி.ஆர். அவர்கள் நம்முடைய கட்சியைவிட்டுப் பிரிந்து,

தொடர்ச்சி 4ஆம் பக்கம்